# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் III பரீட்சை – 2022 சனவரி

## (302) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

**<u>வினாத்தாள் பற்றிய கண்ணோட்டம் :</u>**

இவ்வினாத்தாள் 100 புள்ளிகளை உள்ளடக்கி மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது.

1. பகுதி **A** ஆனது 20 புள்ளிகளுக்காக <u>நான்கு</u> (1 – 4) கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது.
2. பகுதி **B** ஆனது 30 புள்ளிகளுக்காக <u>மூன்று</u> (5 – 7) கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது.
3. பகுதி **C** ஆனது 50 புள்ளிகளுக்காக <u>மூன்று</u> (8 – 10) கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது.

## <u>பகுதி A</u>

### வினா இல. 01

இந்த வினா கீழ்வருவனவற்றைப் பரீட்சித்திருந்தது.

(1) முகாமைத்துவக் கணக்கீடு நிறுவனமொன்றுக்கு ஏன் முக்கியமானது என்பதை இனங்காணுதல்.

(2) சமப்பாட்டுப் புள்ளியை அலகுகளிலும் பாதுகாப்பு எல்லையை அலகுகளிலும் கணிப்பிடுதல்.

**செயலாற்றுகை:**

**(a)** அதிகமான பரீட்சார்த்திகள் சரியான விடைகளை வழங்கி முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சிறப்பாக அமைந்திருந்தது. மேற்படி வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையானது அனைத்து மட்டங்களுக்குமான உள்ளகத் தீர்மானமெடுத்தல், எதிர்காலச் செயற்பாடுகளுக்கு வசதியளித்தல் மற்றும் மூலோபாய தீர்மானமெடுத்தல் போன்ற முகாமைத்துவக் கணக்கீட்டின் பல முக்கியத்துவங்களின் எடுத்துக்காட்டல்களுடன் சிறப்பானதாக அமைந்திருந்தது. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் இரண்டு விடயங்களைக் குறிப்பிட வேண்டும் என்பதற்காக ஒரே விடயத்தை சிறு மாறுதலுடன் வேறு மாதிரியாகத் திரும்பவும் குறிப்பிட்டிருந்தனர்.

**(b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் சமப்பாட்டுப் புள்ளியின் (BEP) கணிப்பீட்டிற்கு முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஆயினும் பாதுகாப்பு எல்லையைக் (MOS) கணிப்பிடுவதற்கு அவர்கள் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றுக் கொண்டனர்.

**மோசமான செயலாற்றுகைக்கான காரணங்கள் :**

(1) சில பரீட்சார்த்திகள் மாறும் கிரயமான ரூபா 12/- இனை மாத்திரம் எல்லைக் கிரயமாக இனங்கண்டிருந்தனர். இதனால், அவர்கள் எல்லைக் கிரயமாக நேர் பொருள் கிரயம் மற்றும் நேர் கூலிக் கிரயம் ஆகியவற்றைத் தவிர்த்திருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் பாதுகாப்பு எல்லையை சதவீதமொன்றாகக் கணிப்பிட்டிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

பரீட்சார்த்திகள் இந்த வகையான கணிப்பீடுகளில் பயிற்சி பெற வேண்டும் என்பதுடன் எல்லைக் கிரயம் என்பதன் கருத்தையும் பாதுகாப்பு எல்லை என்பதால் யாது கருதப்படுகிறது என்பதையும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

**வினா இல. 02**

இந்த வினா 2021 ஆம் ஆண்டிற்கான தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தைக் கணிப்பதைப் பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை :**

செயலாற்றுகை பொதுவாக திருப்திகரமான மட்டத்தில் இருந்தது. பரீட்சார்த்திகள் தொழிற்படு மூலதனச் சுற்று நாட்களின் எண்ணிக்கையைச் சரியாகக் கணிப்பிட்டு முழுமையான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டனர்.

**மோசமான செயலாற்றுகைக்கான காரணங்கள் :**

(1) தரப்பட்ட வியாபார வருமதிகள் புரள்வு விகிதத்திலிருந்து வியாபார வருமதி நாட்களின் எண்ணிக்கையை துணிவதற்கு இயலாமை.

(2) தரப்பட்ட விற்பனைக் கிரயப் பெறுமதியிலிருந்து கடன் கொள்வனவுகளைக் கணிப்பிட முடியாமை.

(3) 2021 ஆம் ஆண்டிற்கான குறிப்பிட்ட கொள்வனவுகளைத் துணிவதற்கு ஆரம்ப மற்றும் இறுதித் தொக்குகளுக்கான சீராக்கங்கள் பிழையாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை. மற்றும் ஆரம்ப தொக்குகளைக் கழிப்பதற்குப் பதிலாக, பரீட்சார்த்திகள் ஆரம்பத் தொக்கினைக் கூட்டி இறுதித் தொக்கினைக் கழித்திருந்தமை.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

(1) சுய கற்றல் புத்தகத்திலுள்ள சம்பந்தப்பட்ட அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கோட்பாடுகள் மற்றும் சூத்திரங்களை விளங்கிக் கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

(2) கடந்த கால வினாத்தாள்களிலுள்ள இந்த வகையான வினாக்களில் பயிற்சி பெறவும்.

**வினா இல. 03**

இந்த வினா, தரப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி, விற்பனைப் பாதீட்டை அலகுகளிலும் பெறுமதியிலும் தயாரிப்பதையும் உற்பத்திப் பாதீட்டை அலகுகளில் தயாரிப்பதையும் பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை :**

பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை சிறப்பாக இருந்தது. திருத்தப்பட்ட பாட அறிவைக் கொண்டிருந்த பரீட்சார்த்திகள் சிறந்த செயலாற்றுகையைக் காட்டியிருந்தனர்.

**மோசமான செயலாற்றுகைக்கான காரணங்கள் :**

(1) சந்தைப் பங்கு 18% இற்கு அதிகரிக்கப்படின் விற்பனையில் அதிகரிப்பை கணிப்பிடல்.

(2) இறுதி இருப்பு அலகுகளுக்கான தேவைகளுடன் உற்பத்தி செய்யப்பட வேண்டிய அலகுகளின் எண்ணிக்கையைத் துணிதல்

(3) உற்பத்தி செய்யப்பட வேண்டிய அலகுகளின் எண்ணிக்கையைக் கணிப்பிடும்போது ஆரம்ப இருப்பு அலகுகள் கூட்டப்பட்டு இறுதி இருப்பு அலகுகள் கழிக்கப்பட்டிருந்தன. இது தவறானதாகும்.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

இந்த வகையான வினாக்களில் பயிற்சி செய்து அடிப்படைகளை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

## வினா இல. 04

இந்த வினா, சம்பந்தப்பட்ட கிரயக் கோட்பாடுகள் மற்றும் இனங்காணல்களைப் பயன்படுத்தி கட்டளை ஒன்றை ஏற்றுக்கொள்ள வேண்டுமா அல்லது நிராகரிக்க வேண்டுமா என்பதை பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை :**

பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை குறிப்பிடத்தக்களவு சிறப்பாக இருந்தது. கட்டளை ஏற்றுக்கொள்ளப்படுமாயின் செலவு செய்ய வேண்டிய கீழ்வரும் கிரயங்களை அவர்கள் கணிப்பிட்டிருந்தனர்.

(1) கட்டளைக்கான மீதிப் **பொருள் X** இன் கிரயம்.

(2) கட்டளைக்கான **பொருள் Y** இன் கிரயம்.

(3) இந்தக் கட்டளை ஏற்கப்படுமாயின் திறமையான கூலி ஊக்கத்தொகைக் கிரயம்.

(4) செலவழிக்கப்படும் மாறும் மேந்தலைக் கிரயம்.

மேலுள்ள அனைத்து மொத்தக் கிரயங்களும் கணிப்பிடப்பட்டு கிடைக்கவுள்ள வருமானத்துடன் ஒப்பீடு செய்யப்படுகிறது.

**மோசமான செயலாற்றுகைக்கான காரணங்கள் :**

(1) ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட **பொருள் X** இன் மிகை இருப்பு இருக்கின்ற போதிலும் அது தற்போதைய கட்டளைகளுக்குப் பயன்படுத்த முடியாத ஆழ் கிரயமொன்றாக இருப்பதை எழுத முடியவில்லை. பரீட்சார்த்திகள் இந்த இருப்புக் கிரயத்தை கணப்பீட்டிற்கு எடுத்துக் கொள்ளவில்லை என்றபோதிலும், அவர்களால் ஏன் இந்த ஆழ் கிரயத்தை எடுத்துக்கொள்ள முடியவில்லை என்பதை விபரிக்கு முடியாமல் இருந்தது.

(2) இந்த கட்டளைக்குப் போதுமான திறமையான கூலி என்பது தொடர்பில்லாத மாறும் கிரயமாகும். எனவே, கூலிக் கிரயத்தைக் கணிப்பீட்டிற்கு எடுக்கத் தேவையில்லை. அதே வேளை ஊக்கத் தொகை கிரயம் என்பது தொடர்புடைய கிரயமாக இருப்பதுடன் அதனை கணப்பீட்டுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

(3) கட்டளையை ஏற்றுக்கொள்ள வேண்டுமா, இல்லையா என்னும் இறுதி முடிவினை நிகர இலாபம் அல்லது நட்டத்துடன் குறிப்பிடவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்த கால வினாத்தாள்களிலுள்ள இந்த வகையான வினாக்களில் பயிற்சி பெறுவதுடன் சுய கற்றல் புத்தகத்தையும் பயன்படுத்தவும்.

## <u>பகுதி B</u>

### வினா இல. 05

இந்த வினா கீழ்வருவனவற்றைப் பரீட்சித்திருந்தது.

**(a)** தரப்பட்ட மூன்று வளங்களிலிருந்து வரையறைக் காரணி / காரணிகளை இனங்காணல்.

**(b)** வரையறைக் காரணிகளின் அடிப்படையில் உத்தம உற்பத்திக் கலவையைக் கணிப்பிடுதல்.

**செயலாற்றுகை :**

இவ்வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை சிறப்பாக இருந்தது. அவர்கள் வரையறைக் காரணிக்கான பங்களிப்பினைச் சரியாகக் கணிப்பிட்டு, அதன் வாயிலாக உத்தம கலவையைக் கணிப்பிட்டதன் மூலம் தமது ஆற்றலைக் காட்டியிருந்தனர்.

வெவ்வேறு அளவுகளின் பங்களிப்பு சரியாகக் கணிப்பிடப்பட்டு நன்றாகச் செய்திருந்தனர். ஆயினும் வரையறைக் காரணியொன்றின் பங்களிப்பைத் துணியும்போது பரீட்சார்த்திகள் அலகொன்றிற்குத் தேவையான வளத்தை சரியாக இனங்காணாததால் தவறு விட்டிருந்தனர். எவ்வாறாயினும், தரமிடல் சரியாகச் செய்யப்பட்டது.

**மோசமான செயலாற்றுகைக்கான காரணங்கள் :**

(1) வரையறைக் காரணியொன்றுக்கான பங்களிப்பைத் துணியும்போது தவறான கணிப்பீடு.

(2) **பகுதி (a)** இற்கான செய்முறைகள் காட்டப்படவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்த கால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.

### வினா இல. 06

இந்த வினா 2022 ஏப்ரல், மே, யூன் மாதங்களுக்கான காசுப் பாதீட்டைத் தயாரிப்பதைப் பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை :**

குறிப்பிடத்தக்களவான பரீட்சார்த்திகள் சிறப்பாகச் செய்திருந்ததுடன் அவர்கள் தொடர்புடைய மாதத்திற்கான விற்பனைகள் மற்றும் செலவினங்களைச் சரியாக இனங்கண்டிருந்தனர். ஆரம்ப காசு மீதி சரியாகக் காட்டப்பட்டிருந்தது.

**மோசமான செயலாற்றுகைக்கான காரணங்கள் :**

(1) 2022 மே இல் ரூபா 230,000/- இற்கான கணினியொன்றின் திட்டமிடப்பட்ட கொள்வனவு பெரும்பாலான பரீட்சார்த்திகளால் காசுப் பாதீட்டிற்கு எடுக்கப்படவில்லை.

(2) ஒவ்வொரு ஊழியருக்கும் ரூபா 80,000/- வீதம் மாதமொன்றுக்கு வர்ணம் பூசும் பணிக்காக செலவிடப்படும் ரூபா 160,000/- கிரயமானது பல பரீட்சார்த்திகளால் கவனத்தில் கொள்ளப்பட வில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் மூன்று மாத பாதீட்டிற்கான செலவினங்களாக மாதமொன்றுக்கு ரூபா 80,000/- இனை எடுத்திருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

(1) கடந்த கால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.

(2) சுய கற்றல் புத்தகத்திலுள்ள வினாக்கள் மற்றும் விடைகளில் பயிற்சி பெறவும்.

**வினா இல. 07**

இந்த வினா சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயம், மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம், மீட்கப்படத்தக்க தனிச்சங்களின் கிரயம், சந்தைப் பெறுமதியைப் பயன்படுத்தி நிறையேற்றப்பட்ட சராசரி மூலதனக் கிரயம் (WACC) ஆகியவற்றைக் கணிப்பிடுவதைப் பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை :**

ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் பங்கொன்றின் சந்தை விலையுடன் (MPS) பங்கொன்றின் பங்கிலாபத்தை (DPS) ஒப்பீடு செய்து, சாதாரண பங்குகளின் கிரயத்தைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள், வினாவில் பங்கிலாப வளர்ச்சி வீதம் தரப்படாதபோதிலும் பங்கிலாப வளர்ச்சி மாதிரியைப் பயன்படுத்தியிருந்தனர்.

மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயத்தைப் பெரும்பாலானவர்கள் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர்.

எவ்வாறாயினும், ஆரம்ப மற்றும் இறுதி ஆண்டுகளில் காசு வெளிப் பாய்வுகள் / உட்பாய்வுகளைச் சரியாக இனங்காணாமை மற்றும் வரி மூலகங்களை சரியாக கவனத்தில் கொள்ளாமை ஆகிய காரணங்களால் மீட்கப்படத்தக்க தனிச்சங்களின் கிரயமானது சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

எவ்வாறாயினும், இரண்டு கழிவு வீதங்களையும் பயன்படுத்தி நிகர இற்றைப் பெறுமதிகள் சரியாகக் கணிப்பிடப்பட்டிருந்ததுடன் சரியான IRR (உள்ளக வருவாய் வீதம்) உம் பெறப்பட்டிருந்தது.

மேலும், WACC ஆனது சந்தைப் பெறுமதிகளைப் பயன்படுத்தி, சரியாகக் கணிப்பிடப்பட்டது.

**மோசமான செயலாற்றுகைக்கான காரணங்கள் :**

(1) பங்கிலாப வளர்ச்சி இல்லாதபோது சாதாரண பங்குகளின் கிரயத்தைத் தீர்ப்பதற்கான பயிற்சி காணப்படாமை.

(2) தனிச்சங்களின் கிரயத்தைக் கணிப்பிடும்போது வரி வீதம் கவனத்தில் கொள்ளப்படாமை.

(3) மீட்கப்படத்தக்க தனிச்சங்களின் கிரயத்தைக் கணிப்பிடும்போது ஆண்டின் ஆரம்பத்திலும் ஆண்டின் இறுதியிலும் உள்ள காசுப் பாய்வுகளை (உட்பாய்வும் வெளிப்பாய்வும்) சரியாக இனங்காணாமை.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்த கால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.

## <u>பகுதி C</u>

**வினா இல. 08**

இந்த வினா கீழ்வருவனவற்றைக் கணிப்பிடுவதன் மூலம் முரண் பகுப்பாய்வைப் பரீட்சித்திருந்தது.

**(a)** **(i)** விற்பனை விலை முரண்.

**(ii)** நேர் கூலி வீத முரண்.

**(iii)** நேர் கூலி கலவை முரண்.

**(iv)** நேர் கூலி விளைவு (உற்பத்தித்திறன்) முரண்.

**(b)** தொழிற்பாட்டுக் கூற்றைத் தயாரிப்பதன் மூலம் உண்மையான பங்களிப்புடன் பாதிடப்பட்ட பங்களிப்பை இணக்கம் செய்தல்.

**செயலாற்றுகை :**

ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மோசமானதாக இருந்தது.

**மோசமான செயலாற்றுகைக்கான காரணங்கள் :**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் விற்பனை விலை முரண் மற்றும் நேர் கூலி வீத முரண் ஆகியவற்றைச் சரியாகக் கணிப்பிட்டு, அதற்கான புள்ளிகளை மாத்திரம் பெற்றிருந்தனர். இருப்பினும், நேர் கூலி கலவை மற்றும் நேர் கூலி விளைவு முரண்களை கணிப்பிடுவதற்கு அவர்கள் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர். இதனால் புள்ளிகளை இழந்திருந்தனர்.

உண்மையான மற்றும் பாதிடப்பட்ட பங்களிப்புகளின் இணக்கமானது சரியாகச் செய்யப்பட்டிருந் ததுடன் அது தொழிற்பாட்டுக் கூற்றிலும் காட்டப்பட்டிருந்தது.

**தோல்விக்குச் சாத்தியமான காரணங்கள் :**

(1) கலவை மற்றும் விளைவு முரண்களின் கணிப்பீடு தொடர்பான போதிய பயிற்சியின்மை அவதானிக்கப்பட்டது.

(2) நேர் கூலி வீதம் மற்றும் நேர் கூலி கலவை முரண்களைக் கணிப்பிடுகையில் நியம கூலி மணித்தியாலங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

(3) சிலர் முரண்கள் பாதகமானதா (A) அல்லது சாதகமானதா (F) எனக் குறிப்பிடவில்லை. அவர்கள் வெறுமனே தொகைகளை மட்டும் குறிப்பிட்டிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

கடந்த கால வினாத்தாள்களில் இந்தப் பாடப் பகுதி தொடர்பான வினாக்களில் பயிற்சி பெறவும்.

**வினா இல. 09**

இந்த வினா நிகர இற்றைப் பெறுமதியைக் (NPV) கணித்து, NPV இன் அடிப்படையில் முதலீட்டின் சாத்தியத்தன்மையை மதிப்பிடுவதைப் பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை :**

அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் செயலாற்றுகையும் திருப்திகரமானதாக அமைந்திருந்தது. சிலரைத் தவிர ஏனைய பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு சிறப்பாக விடையளித்திருந்தனர்.

**மோசமான செயலாற்றுகைக்கான காரணங்கள் :**

கீழ்வரும் கணிப்பீட்டுச் சிக்கல்கள் காணப்பட்டன.

(1) தேய்மானமற்ற நிலையான கிரயம்.

(2) மூலதன விடுதொகைக் (மூலதனப் படி) கணிப்பீடானது 4 ஆண்டுகளுக்குப் பதிலாக முழுமையான செயற்றிட்டக் காலப்பகுதியான 5 ஆண்டுகளுக்குக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(3) தேய்மானச் சீராக்கத்தைக் கவனத்தில் எடுத்த வரியின் தவறான கணிப்பீடு.

(4) வரிக் கணிப்பீடு வேறாகக் காட்டப்படவில்லை. அதற்குப் பதிலாக அனைத்து செய்முறைகளும் செயற்றிட்ட முன்மொழிவுச் செய்முறையில் காட்டப்பட்டதால், அது செயற்றிட்ட முன்மொழிவில் கவனத்திற் கொள்ளப்பட்ட காசுப்பாய்வுகளைச் சீர்குலைத்துள்ளது.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

இந்தப் பாடப்பரப்புடன் தொடர்புடைய அதிக வினாக்களில் பயிற்சி பெறுவதுடன் சுய கற்றல் புத்தகத்தைப் பயன்படுத்தி கோட்பாட்டு ரீதியான எண்ணக்கருக்களை மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

## வினா இல. 10

இந்த வினா சமான அலகுகள் மற்றும் தொடர்புடைய கிரயக் கூற்றையும் செயன்முறைக் கணக்கையும் தயாரிப்பதை **பகுதி (A)** இல் பரீட்சித்த அதே வேளை நிகழ்தகவு நிபந்தனைகளின் கீழ் புதிய பொருளை அறிமுகப்படுத்துவதை மதிப்பிடுவதை **பகுதி (B)** இலும் பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை :**

**பகுதி (A)** இற்கு, செயன்முறைக் கணக்கைக் காட்டுவதற்கான புள்ளிகளைப் பெற்றிருந்தனர் ஆயினும், சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றைத் தயாரிப்பதற்கான விசேடமாக இறுதி WIP இற்கான சமான அலகுகளை கணிப்பதில் போதியளவு புள்ளிகளைப் பெற்றிருக்கவில்லை. சிலர், கூற்றுக்கான அசாதாரண நட்டத்தின் சமான அலகுகளை எடுத்திருக்கவில்லை. சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றைப் பெறும்போது சாதாரண நட்டத்தின் ஒடிவுப் பெறுமதி கவனத்தில் கொள்ளப்படவில்லை.

**பகுதி (B)** இற்கு, நிகழ்தகவுகளைப் பிரயோகித்ததன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விற்பனைகள் மற்றும் தொடர்புடைய மாறும் கிரயம் ஆகியவற்றைச் சரியாகக் கணிப்பிட்டதன் காரணமாக செயலாற்றுகை திருப்தியாக இருந்தது.

எவ்வாறாயினும், விற்பனைப் பெறுமதியை தவிர்த்ததன் காரணமாக விற்பனைப் பணிசை சரியாகக் கணிப்பிடப்படவில்லை. அதற்குப் பதிலாக, அவர்கள் விற்பனைப் பணிசையைக் கணிப்பிடும்போது பங்களிப்புப் பெறுமதியைப் பயன்படுத்தியிருந்தனர். மேலும், நிலையான கிரயமானது இரண்டு தெரிவுகளின் கீழும் ஒரு பொதுவான செலவினமாக இருப்பதால் அதனை கணிப்பீட்டிற்கு எடுக்கத் தேவையில்லை என்ற போதிலும் அதுவும் கணிப்பீட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

**மோசமான செயலாற்றுகைக்கான காரணங்கள் :**

- பொருளின் அளவுகளைக் கணிப்பிடும்போது நிகழ்தகவுகள் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

(1) கடந்த கால வினாத்தாள்களில் உள்ள இந்த வகை வினாக்களில் பயிற்சி பெறவும்.

(2) சுய கற்றல் புத்தகத்தைப் படிக்கவும்.

- * * * -